33D/90 32

# போராட்டம்

அறிஞர்

C. N. அண்ணாதுரை M. A.,

பகுத்தறிவுப் பண்ணை

சென்னை-1.

பண்ணை வெளியீடு - 2

முதற்பதிப்பு ஆகஸ்ட் - 1953

7608a

விலை

0 - 8 - 0

SAVACHANA MUNIVAR LIBRARY
சிவஞான முனிவர்
நூல் நிலையம்
திருநெல்வேலி
TIRUNELVELI.

# பதிப்புரை

'போராட்டம்' என்ற இந்தத் தொகுப்பு நூல் அறிஞர் அண்ணாவினுடைய சொற்பொழிவுகளின் சாரம்!

சென்னை 9-வது வட்ட தி. மு. க. சார்பில் 24-5-53-ல் கினிமா சென்ட்ரலிலும், புயல் நிவாரண நிதிக்காக, 23-5-53-ல் பச்சையப்பன் திடலிலும், 31-5-53–ல் அரக்கோணத்திலும், 28-6-53–ல் விருதையிலும் அண்ணா போர் முரசு கொட்டினார்!

இன்று நாட்டிலே போர்க்கொடி உயர்த்தப்பட்டுள்ளது. களம் புகுந்த காளைகளின் எக்காளம் எதிரொலிக்கிறது.

இந்தச் சமயத்தில் அண்ணாவின் போர் முரசு, தைரிய மூட்டும், நம்பிக்கையூட்டும், உறுதியும் உற்சாகமும் அளிக்கும் என்ற கருத்தில், '**போராட்டம்**' எனும் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்! போராட்டம் வெல்க!

**பகுத்தறிவுப் பண்ணை**

# பட்டினித் தோட்டம்

## இளங்கீரன்

எழுதியது

※

**குடிசையூரிலே** பிறந்த பசியப்பன் ஒரு நாள் எப்படியோ பணத்தோட்டத்திற்குள் புகுந்து விட்டான். அங்கே குபேரபுரியிலே பறக்கும் செல்வக் கொடியின் கீழ் வசிக்கும் மனிதர்களின் கோலாகலம் நிறைந்த வாழ்க்கையைக் கண்டான். குடிசையூர்க் கோமளாங்கி ஒருத்தி குபேரபுரி வாழ்வை வர்ணிப்பதையும் அவள் துணையால் அவன் அந்த வாழ்க்கையைப் பொருமைக்கண்களோடு பார்த்துச் செல்வதையும் நீங்களே படித்துத்தான் தெரிந்து கொள்ளவேண்டும்.

**பாவம்**, தான் வசிக்கும் துன்பக் கோட்டையுள் இருக்கும் குடிசையூரையும் அதில் பறக்கும் கன்னங்கரிய வறுமைக் கொடியையும் நினைக்கும் போது அவன் உள்ளம் தீப்பற்றி எரியாமலா இருக்கும் ?

**இந்த** அழகிய உருவகக்கதையை ஒவ்வொருவரும் கண்டிப்பாகப் படித்துப் பார்க்கவேண்டும்.

அழகிய மூவர்ண முகப்புடன்

விலை ரூபா ஒன்று


**விபரங்களுக்கு :**

**சக்தி பதிப்பகம்**

12, குமரப்ப முதலி தெரு,

சென்னை-1

SIVAGNANA MUNIVAR LIBRARY
சிவஞான முனிவர் நூல் நிலையம்
திருநெல்வேலி
TIRUNELVELI.

# போராட்டம்

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே! மறைந்த மாவீரன் தோழர் சௌந்தர பாண்டியன் அவர்கள் பெயரால் ஓர் படிப்பகத்தை திறக்க முன் வந்த ஒன்பதாவது வட்ட திராவிட முன்னேற்றக்கழக அன்பர்களின் அரிய ஏற்பாட்டைக் கண்டு ஆனந்த மடைகிறேன்—அவர்களின் நல்ல எண்ணத்தைப் பாராட்டுகிறேன்.

நம்முடைய நாட்டில் இப்படிப்பட்டப் படிப்பகங்கள் பலப்பல தேவைப் படுகிறது. படிப்பகத்தின் மூலம் பாமர மக்கள் பலப்பல புதிய நூல்களைப் படித்துப் பயன் பெறக் கூடும். படிப்பகம் மட்டுமல்ல ஆரம்ப பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டும். மாலை அல்லது குறிப்பிட்ட சில நேரங்களில் முதியோர் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தி அதற்காகவும் பாடுபட வேண்டும்.

சென்னை முழுமையும் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அறியதோர் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதற்கான உதவிகளைப் பொது மக்கள் செய்ய முன்வர வேண்டும்.

எனக்கு முன்னல் தோழர் இராமச் சந்திரன் அவர்களும், தோழியர் சத்தியவாணி முத்து அவர்களும் பேசினர்கள். நீங்களும் கேட்டீர்கள். மகிழ்ந்தீர்கள்

அவர்கள் பேசும்போது, உதாரணத்திற்காக சில விஷயங்களை எடுத்துக் காட்டினர்கள். அதை மாற்றுக் கட்சியினர் பொது மக்களிடம், திருத்திக் கூறி தப்பபிப்ராயம் கற்பித்து விடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. குற்றம் குறை கண்டுபிடிப்பதே மாற்றுக் கட்சியின் வேலையாகி விட்டதால், அவ்வித அந்த நிலை ஏற்படக்கூடாதென்று ஆசைப்படுகிறேன்.

தோழர் இராமச்சந்திரன் கலையும் வாழ்வும் என்னும் பொருள் பற்றி பேசும்போது பலப்பல அறிய விஷயங்களைக் கூறினர். கற்காலம் முதல் இக்காலம் வரை நாகரீகம் என்ன நிலையில் இருந்து வருகிறது என்பதை அழகு படுத்தி ஆதாரங்களைக் காட்டினர். அப்படிக் காட்டப்பட்ட ஆதாரங்களில், ஆச்சாரியார் சர்க்கார் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ள புதிய கல்வி திட்டம். அக் கல்வி திட்டத்தில் உள்ள குறைபாடுகளை யும், முரண்பாடுகளையும் எடுத்துக் காட்டினர்.

ஜாதி பேதம் ஒழிய வேண்டும், கலப்பு மணம் அவசியம் என்று ஆச்சாரியார் ஒரு இடத்தில் பேசி விட்டு, மற்ெருரு இடத்தில், கல்வி கற்பது மட்டுமல்ல மாணவர்களுக்கு; முக்கியம் தொழில் துறையிலும்; அவர்கள் குல சாம்பிரதாயப்படி, அதை மறவாமல் வண்ணன், வண்ணாரத் தொழிலையும், அம்பட்டன் அம்பட்டத் தொழிலையும் செய்ய வேண்டும் என்று

அறிவுறை ஆற்றும்—ஆச்சாரியார், முன்னுக்குப் பின் முரணாக குலத் தொழிலும் வளர வேண்டும், கலப்பு மணமும் செய்து கொள்ள வேண்டும் என்று கூறுவது தவறு என்று தோழர் இராமச்சந்திரன் குறிப்பிட்டார். அவர் நமது கூட்டங்களிலே பேசி அதிகமாக பழக்க மில்லை. ஆதலால், வண்ணான், அம்பட்டன் என்று கூறி விட்டார்.

வண்ணான் என்பதை நாம் சலவைத் தொழிலாளி என்றும், அம்பட்டன் என்பதை மருத்துவத் தொழில் செய்பவர் என்றும், கூறுவதுண்டு, அதன்படி தோழர் கூறியிருக்க வேண்டும். பழக்க மில்லாததால், தவறி அப்படி கூறி விட்டார். இந்த தவறுதலை எதிர்கட்சி யாளர் பொது மக்களிடம் கொண்டுபோய், பார்த்தீரா திராவிட முன்னேற்ற கழகத்தை, பிறவியில் உயர்வு, தாழ்வு கூடா தென்கிறீர்கள். இராமச்சந்திரன், வண்ணான், அம்பட்டன் என்று ஜாதியின் பெயரைச் சொல்லி உங்களை கேவலப் படுத்தி விட்டார், என்று ஆர்பரிப்பார்கள், அதைக் கண்டு ஏமாற வேண்டாம் என்று பொது மக்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

தோழியர் சத்தியவாணி முத்து பேசுகையில் பெண்கள் எழுச்சி பெற வேண்டும் என்பதற்கு உதாரணமாக கணவன், மனைவி நாடகத்திற்குச் சென்று திரும்பியபோது கூறிய வாதத்தைகளைக் காட்டினார்கள். துர்ச்சாதனன் துகில் உரிக்கும்போது, துரோபதை யார் என்று கேட்டாள். ஐவருக்கும் தேவி, அழியாத பத்தினி என்று கூறியதும், அவள், கணவ

ளிடம் உங்களுக்கு குழந்தையில்லை, நீங்கள் வேறு ஒருவனுடன் இருங்கள். நான் வேறு ஒருவனுடன் இருக்கிறேன், இது தவறு இல்லை என்பதை புராணம் கூறுகிறதே, என்ற கேள்வியைப் போட்டு கணவனைத் திணர அடித்தாள். அவர் திண்டாடினார். அதில் அவர் எடுத்துக் காட்டியது பெண் எழுச்சி பெற்றுள் என்பதை தெளிவு படுத்தவே அல்லாமல், ஒவ்வொரு வரும் அப்படியே இருக்க வேண்டும் என்பதல்ல, அவர்களுடைய எண்ணம், நோக்கம்.

இந்த பேச்சில் சிந்திய எச்சிலை, எதிர் கட்சியார், பொது மக்களிடம் திரித்துக்கூறி, தங்களுக்கு ஆதரவு தேட முற்படலாம், அது ஆகாத காரியம் என்று அவர்களுக்கு எச்சரிக்கிறேன். இருவரின் பேச்சிலும் குற்றம் குறைகள் இல்லை என்பதே எனது அபிப்ராயம். பொது மக்களும் அப்படியேதான் நினைப்பார்கள். எதிர் கட்சியின் ஏமாற்றலுக்கு பொது மக்கள் செவி சாய்க்கக் கூடாது.

பொதுவாக நமது நாடு கல்வித் துறையில் பிற் போக் கடைந்துள்ளது. மற்ற நாட்டை போல கல்வியைப் பரப்புவதில் அக்கறை கொள்ளவில்லை நமது ஆட்சியாளர். அன்றாடம் ஓர் திட்டத்தை வெளி யிட்டு மாணவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் பெற் றோர்களுக்கும் தொல்லை தந்து வருகின்றனர். மக்கள் பெற்றுள்ள கல்வி அறிவு மிகவும் குறைவு, பெற்ற அறிவை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு இப்படிப் பட்ட படிப்பகங்கள் மிகவும் உதவியாக

இருக்கும். படிப்பகங்கள் நாட்டில் அதிகமாக வளர வேண்டும். படிப்பகம் நடத்த பொருள் தேவைதான், அதை நாம் பொது மக்களிடமிருந்து பெற வேண்டும். இந்த உதவியும் பொருளாக இருப்பதைவிட, நூல் களாக இருந்தால் மிகவும் அவசிய மென்றே கருது கிறேன்.

தோழர் இராமச்சந்திரன் அவர்கள் கலையும் வாழ் வும் என்பதைப் பற்றி பேசும்போது மிக அழகாகவும், விரிவாகவும் பேசினுர். கலைக்கு நல்லதொரு விளக்க மும் தந்தார். மக்கள் எழுச்சி பெற்றவர்களாக விளங்க வைப்பதே கலை. கலை புதியதோர் பாதையில் மக்களை நடத்திச் செல்வதாக இருக்க வேண்டும். பழமை மோகம் ஒழிய வேண்டும். மாற்ற மென்பது மக்கள் நலன் கருதியதாக இருத்தல் மிக மிக அவசியம். அரசி யலில் மாறுதல் வேண்டுமென்பது போல மதத்திலும் மாறுதல் வேண்டும்.

பழைய காலத்தில் இருந்தவை அந்தந்த காலத் திற்கு ஏற்றதாக இருக்கலாம். அது இக்கால அறிவுக்கு பொறுத்த மற்றதாக இருந்தால்—அதை மாற்றி அமைக்க வேண்டாமா? மேல் நாடு நாகரீகவளம் அமைந்த நாடு என்று கூறுகிறுர்கள். அங்கும் பல ஆயிரக் கணக்கான ஆண்டவன் தோன்றியதாகக் கூறப்படுகிறது.

நம் நாட்டைப் போன்று மினர்வா, ஜுபிடர், ஹார்ஜிஞ போன்ற எண்ணற்றவைகள். அவைகளை

வணங்கி வந்தவர்கள் மாற்றம் கண்டுள்ளனர். பிதா ஏசு என்றும், அதற்காக ஒரு பைபில், வேத சாஸ்திரம்,இஸ்லாம். சமூகமும் அப்படியேஉருவமற்றஅரூபி எங்கும் நிறைந்த பொருள். அதற்கு உருவம் ஒன்று அவசிய மில்லை என்று கூறி அதன்படி அல்லாவை வணங்கி வருகிறார்கள். அதை விளக்க 'குர் ஆன்' என்னும் வேத நூலும் அவர்களுக்கு உண்டு.

ஆகவே, பழமை கடவுள் மாற்றப்பட்டு புதுவழி கண்டு தெய்வ வழிபாட்டைச் செய்து வரும் மற்றவர்களைப் போல் நாமும், நமது அறிவு ஆராய்ச்சிக்குட்பட்ட கடவுள் வழிபாடு இருக்க வேண்டாமா? மார்க்கத்தில் மறு மலர்ச்சிக் காண வேண்டாமா? கண்டு அதன்படி நடக்கும்படி கூறுவதுதான் அறிவுடைமை.

அறிவு பிரசாரத்தை ஆரம்பத்தில் எதிர்த்தார்கள். மதம், கடவுளுக்கு ஆபத்து தந்து விடுவதாகக் கூறினர்கள். ஆனல், எனது அரும் பெரும் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 23 ஆண்டுகளுக்கு முன்பே, அறிவு பிரசாரத்தைச் செய்து வந்தார். அதற்காக சுயமரியாதை இயக்கத்தையும் கண்டார், இந்த இயக்கம் இன்றுவரை இருந்து வருகிறது.

அதன் பிரதிபலிப்பே நான், அவர் காட்டிய வழி நின்று தொண்டாற்றி வருகிறேன். அறிவுத்துறையில் மட்டும் மல்ல, கலைத் துறையிலும் அவர் எனக்கு குரு.

ஈரோட்டில் அவருடைய தலைமையில் சந்திரோ தயம் என்ற நாடகம் நடை பெற்றது. அதில் நானும், மற்றவர்களும் நடித்தோம், என்னை மேடையில் பாராட்டிப் பேசிய பல பதங்கள் என் ஞாபகத்திற்கு வருகிறது.

பல மாநாடுகளைக் கூட்டி பேசுவதை விட ஒரு நாடகம் நடத்தி மக்களை, மாற்றலாம் போலிருக்கிறதே. நீங்கள் இவ்வளவு அழகாக நடிப்பீர்கள் என்று நான் நினைக்க வில்லையே, என்று கூறியது மட்டுமல்ல, என்னைப் பாராட்டி பத்திரிகையில் மறுநாள், அவர் கைப் பட தலையங்கம் எழுதி, எனக்குப் படித்துக் காண்பித்து வெளியிட்டார்.

குருவின் பாராட்டு தலைப்பெற்று அதன்வழி நடக்கிறேன். குருமாறினும், சீடன் செயலில் மாற்ற மில்லை, ஏகலைவன் போல, கலைமிக அவசியம்.

கலை மூலம் நமது மக்களுக்கு அரசியல் சமுதாய சீர் திருத்த எண்ணங்களைப் புகுத்தலாம். நடிப்பின் மூலம் உணர்ச்சியை மக்கள் மனதில் உண்டாக்கலாம். அதற்காகவே திராவிட முன்னேற்றக் கழகம், தன் கொள்கைப்படி பல நடிகர்களை நாட்டிற்குத் தந்திருக் கிறது.

மதபக்தி, மூட நம்பிக்கை நம் மக்கள் மனதில் ஆழ பதிந்திருக்கிறது அதில் மாற்றம் காணவேண்டும், வர்ணுசிரம கோட்பாடுகள் நிலைத்திருக்க ஆரியர் கை

யாண்ட முறைகள் பலப்பல. அவைகளில் ஒன்று கதா காலட்க்ஷேபங்கள்.—

அவைகள், நாடு நகரங்களில் மட்டுமல்ல, பட்டி தொட்டிகளிலும், வீதிகள் தோறும் நடைபெற்று வருகின்றன. அவர்கள் ராமாயணம், பாரதம், அரிச் சந்திரா, நல்லதங்காள் கதைகளைக் கையாள் வதைப் போல நாமும் சீர் திருத்த வாதிகளான சாக்ரடீஸ் போன்றவர்களின் கதைகளை காலட்க்ஷேபத்தின் மூலம் பரப்பவேண்டும். இதனால், மிகுந்த பயனுண்டு, மக்களும் திருந்துவார்கள் நான் சென்ற ஆண்டில் திண்டிவனத்தில் நடைபெற்ற சமூக, சீர் திருத்த மாநாட்டில் இதை குறிப்பிட்டிருக்கிறேன். நமது பிர சாரகர்கள் இதை கையாளவேண்டுமென்று. இது நமக்கு புதியதுதான், பழக்கம் ஏற்படும் வரையில். அதன் பிறகு நம்மவரை மிஞ்ச எவராலும் முடியாது. காலட்க்ஷேபம் என்றதும், பயந்து விடாதீர்கள்! மிக எளிதானது, அதன் முறை தெரிந்து கொண்டவர் களுக்கு. இந்த முறையைக் கையாளவேண்டுமென்று, நான் நெடு நாட்களாக நினைத்ததுண்டு. என் நினைவை நிறைவேற்ற நீங்கள் முற்படவேண்டும்.

ஆச்சாரியார் அழிக்கப்படவேண்டியதை காக்க, அழகான முறையில் பேசி வருகிறார் எங்கு சென்று லும். பஜனை செய்யுங்கள், பஜகோவிந்தம் பாடுங்கள். கடவுளை மறவாதீர்கள், மறந்ததால் மழையில்லை, பஞ்சம் வந்து விட்டதென்று. அவருடைய ஆரிய மத உபதேசம் அறவே ஒழிய வேண்டுமானால், நாமும்

மக்கள் மத்தியில் கதாகாலக்ஷேபங்கள் செய்ய வேண்டும்.

ஆச்சாரியார், நாஸ்திகம் பரவி விட்டது, அதை ஒழிக்கவேண்டுமென்கிறார். ஆஸ்திகம் வளர அவர்கள் கூட்டம் வேலை செய்யட்டும் அதை தடுக்கவேண்டிய புதிய திட்டம் நமக்கு தேவையில்லை. அவர்கள் கையாளும் கதாகாலட்க்ஷேபமே போதுமானது.

காரைக்காலம்மையார் பட்ட கஷ்டத்தைச் சொல்லுங்கள். சாக்ரடீஸ், விஷ மூட்டப்பட்ட கதையைச் சொல்லுங்கள்.

கலீலே சமூக சீர்திருத்த வாதி மறைக்கப்பட்டதை கூறுங்கள், திருஞான சம்மந்தர் ஞானப்பால் குடித்த தன்மையை விளக்குங்கள். நாடு அறியாது இருந்த நல்லவர்களை, அவர்களை நாட்டுமக்கள் முன் கொண்டு வந்து நிறுத்தி கூறுங்கள் அவர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களை. அதன் பின் நடக்குமா புராண புரட்டு காலட்க்ஷேபத்தின் மூலம் பாருங்கள்.

பாகவதர்கள்தான் காலட்க்ஷேபம் செய்ய பிறந்தவர்கள் என்று நினைக்கவேண்டாம், நீங்களும் அவர்களைப்போல், பட்டு பீதாம்பரங்களைக்கட்டி, பளபளப்பான மோதிரங்களை அணிந்து, கையில் கஜ்ஜரா கட்டையுடன் தோற்ற மளியுங்கள். கூறுங்கள் சீர்திருத்தவாதிகளின் சரித்திரத்தை கேட்பவர் கேலி செய்யார், பார்ப்பவர் பரிகசிக்க மாட்டார்கள். ஆனல்,

பக்தர்களுக்கு மிரட்சி, ஆரியத்திற்கு ஆட்டம் கொடுக்கும்.

இம்முறையை ஒரு சில ஆண்டு கையாண்டால், மேலும் நீண்ட நாட்களாக, இருந்து வந்த மூட பழக்க வழக்கங்கள் மறைந்து மண்மேடாகும். உதாரணம் வேண்டுவ தில்லை.

நாம் நாடகத்தில் நடிக்க முற்பட்டோம். புராண நாடகங்கள் நடை பெறுவதை மக்கள் பார்க்கவும் வெட்கப் படுகிறார்கள். சினிமாவில் மாற்றத்தை காண முடிந்தது, நம்முடைய பிரச்சாரத்தால். சென்ற ஆண்டு எடுக்கப்பட்ட ஐம்பத்தி மூன்று படங்களில், ஐம்பத்தி ரண்டு படங்கள் சமூக சீர் திருத்தத்தைப் பின்பற்றி எடுக்கப் பட்டது. அவ்வளவும் கழகப் படமல்ல. எந்த கோணத்தில் பார்த்தாலும் அவைகள் நம்முடைய பிரச்சாரத்தால் மாற்ற மடைந்தவை

மக்கள் விருப்பம் படி மாற்றம் தேவை என்பதை அறிந்து பட முதலாளிகள் தங்கள் செய்கை களையும் மாற்றிக் கொண்டார்கள். ஆகவே கலையில் மறு மலர்ச்சியைக் கண்டோம். காலட்க்ஷேபத்திலும் அப்படியே காண முடியும் என்ற நம்பிக்கை எனக் குண்டு.

முதியோர்களுக்கு காலட்க்ஷேபம் மூலம் கல்வி அறிவைப் புகுத்தலாம். ஒருவர் படித்து தெரிந்துக் கொள்வதை விட கேட்டுத் தெரிந்து கொள்ளும்படிச் செய்ய இது மிகவும் சாதகமானது.

திராவிட முன்னேற்றக்கழக சென்னை கிளைகள் இதில் அக்கரைச் செலுத்த வேண்டும் ஒவ்வொரு கிளைக் கழகமும் ஒரு படிப்பகத்தை திறந்து அதன் மூலம் மக்கள் அறிவு தெளிவு பெற பாடு படலாம். அதற்கான வேலைகளில் நானும் பங்கு கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த வட்டத்திலுள்ளவர்கள் முதன் முதல் இம் முயற்சியில் ஈடு பட்டதைக் கண்டு நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் மேலும் மேலும் ஊக்கம் குன்ருமல் உழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வணக்கம்.

தலைவர் அவர்களே! தோழர்களே !!

இன்றைய விழாவிற்கு இவ்வளவு பெருவாரியான மக்கள் கூடியிருப்பதைக் காண நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

நிதியளிப்பு விழா சிறப்பாக நடைபெற, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவும், கருணாநிதியும் எடுத்துக் கொண்ட முயற்சி நமக்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளது. நான் உங்கள் சார்பாக அவர் களை பாராட்டுகிறேன்.

தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அறிய தோர் சொற்பொழிவு ஆற்றினார். நீங்களும் கேட்டு ரசித்தீர்கள். சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்தேன், நாடக சம்பந்தமாக நடிகர் நாராயண சாமி மூலம். முதன் முதலில் நான் அவரை சந்திக்கும் போது சந்தேகம் கொண்டேன் அவர் ஒரு ஆரியன் என்று. பிறகு அவர் ஒரு திராவிடன் என்று தெரிந்து ஆனந்தமடைந்தேன்.

அவருடைய தோற்றம், அழகு, உடல் அமைப்பு, பளப்பளப்பு, பார்ப்பனர்களுக்கு பொறாமையை உண்டாக்கியிருக்குமென்பதில் ஐயமில்லை. அவருடைய பேச்சு பெருமைக் குறியது. அவருடைய ஒத்துழைப்பு, நமது எதிர்கால திட்டத்திற்கு வெற்றியைத் தேடித் தருமென்று நம்புகிறேன்.

தோழர் மதியழகன் பேசும்போது, ஆட்சியாளர் போக்கை மிக அழகாக, எடுத்துக் காட்டினார். காங்கிரஸ் கட்சி, ஆட்சிக்கு வந்த பிறகு நாடு பிற்போக்குடைந் துள்ள நிலைமையை.

TIRUNELVELI.

நாட்டு மக்களுக்காக பாடுபடும் எந்த கட்சியானு லும், தனிப்பட்ட மனிதர்களானாலும் அவர்களிடம் தன்னடக்கம், தளராத ஊக்கம், பெருந்தன்மை இருக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

நம்மைக் கண்டு சில, பல சில்லுண்டிகள், சிந்து பாடுகிறார்கள், கேலியும் கிண்டலும் கிளம்புகிறது மாற்றார்களிடமிருந்து, அது மாறாது! காரணம்? அவர்கள் மாற்றார்கள்.

நான் சிறுவனாக இருந்த போது, நான் இருக்கும் வீதிக்கு அடுத்த வீதியில் ஒரு பஜனைக் கூடம் இருந்தது. அதை சோம சுந்திர முதலியார் முன்னின்று நடத்தி வந்தார். அவர் வாரந்தோறும், சுண்டல் செய்து தருவது வழக்கம் பஜனைக்கு வரும் மக்களுக்கு. அந்த சுண்டலையும், அந்த மனிதரே தயார் செய்வார். அது மட்டுமல்ல, கடலை வாங்க அவரே கடைக்குச் செல்வார். காரணம்? யாரையும் நம்ப மாட்டார்.

அதைக் கண்டு ஊரார் கிண்டலும் கேலியும் செய் தனர். இவ்வளவு பெரிய மனிதன் தானே கடைக்குச் சென்று, கடலை வாங்கி, அடுப்பேற்றி சுண்டல் செய்து, தானே பங்கிடுகிறானே, யாரையும் நம்பாத பாவி, லோபி என்று தூற்றினர்.

விஷயம் முதலியார் காதில் விழுந்தது. மறு நாள் கடலை வாங்க ஒரு ஆளை அனுப்பினார். வாங்கி வந்த கடலையை சுண்டல் செய்ய மற்றொருவரைக் கொண்டு செய்தார். பங்கிட பக்தர்களில் ஒருவரை நியமித்தார். "பார்த்தார்கள் ஊரார், இந்த செய்கையைப் பாராட்டி ஞர்கள் இல்லை. உடனே பழிக்க முற்பட்டார்கள். பார்த்தீரா முதலியார் ஜம்பத்தை ! வாழ்வு அதிகமாகி விட்டது பஜனை மடத்து பணமல்லவா அவருககென்ன வந்தது" என்று

தானே செய்து வந்த வேலைக்கு இப்பொழுது தனித் தனியாக ஆள் வைத்து விட்டார். இந்த வாழ்வை எத்தனை நாட்களுக்கு பார்க்கலாம் ! என்று பரிகசி, தார்கள். பரிதாபத்திற்குறிய பஜனை மடம் வேலையைப் போல தான். பொது வாழ்வும்.

பொது வாழ்வு பஜனை மடத்தை விட மிகவும் கஷ்டமானது, பொறுப்பு வாய்ந்தது. பொது வாழ் வில் ஈடு பட்ட எவரும் புகழப் படுவதைப் போல், பன் மடங்கு தூற்றப் படுவார்கள்.

அந்த தூற்றலைக் கண்டு துக்கப் படவோ, கஷ்டப் பட்டு கலங்கவோ கூடாது. அப்படிப்பட்டவர் பொது வாழ்விற்குப் புறப்பானவர். எதையும் ஏற்கும் இருதயம் வேண்டும் பொதுத் தொண்டிற்கு. உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பள்ளியில் நாலாவது வகுப்பிற்குறிய ஒரு பாட புத்தகத்தில் ஒரு கதையுண்டு. தந்தையும் தனயனும்

கழுதை மீது ஏறி அடுத்த ஊர் பிரயாணம் செய்தார்கள். பாதையில் போவோர் வருவோர் பார்த்தனர் இவர்களை, பரிதாபப் பட்டனர் கழுதைக்காக.

இரண்டு தடியர்களும் கழுதை மீது உட்கார்ந்துக் கொண்டு போகிறார்கள், பாவம் கழுதை அவர்களைத் தாங்க தத்தளிக்கிறது என்றனர். உடனே அவர்கள் கழுதையை விட்டிறங்கி நடக்கலாயினர். சிறிது தூரம் சென்றதும், சிலர் கூறினர். குழந்தையை நடக்க வைத்து அழைத்து போகிறான் பாவி, கழுதை மீது உட்கார வைத்து போகக் கூடாதா என்றனர். அதை கேட்ட தந்தை, மகனைக் கழுதை மீது ஏற்றிச் செல்ல ஆரம்பித்தான். அதற்கு அடுத்து, கொஞ்ச தூரம் போனதும் ஒரு கூட்டம் அக்காட்சியைக் கண்டு, தள்ளாத கிழவன் தடுமாற்றத்தோடு நடந்து செல்ல, நடக்க சக்தியுள்ள பையன் கழுதை மீதா என்றனர் குறும்புக்காரர்கள்.

இந்த கூற்றைக் கண்ட இருவரும் கழுதையைத் தூக்கி தோளின் மீது சுமந்து ஆற்று பாலத்தைக் கடக்கலாயினர். நடு பாலத்திற்கு வந்ததும், கழுதை ஆற்று வெள்ளத்தைக் கண்டு மிரண்டு, கால்களை உதைத்து உதறி ஆற்றில் விழ, விழுந்து கொண்டிருக்கும் கழுதையைத் தாவிப் பிடிக்க தனயனும், அவனைப் பிடிக்க தந்தையும் ஒருவர் பின் ஒருவராக விழுந்தனர் ஆற்றில். ஆற்று வெள்ளம் அவர்கள் மூவரையும் விழுங்கிற்று.

இந்தக் கூற்றுக்கு ஒப்பானது குற்றம் குறை கூறும் குறும்பர்கள் செய்கை. ஆகவே பொதுச் சேவை சிரமமானது மட்டு மல்ல, சிககலானது சிந்திப் போருக்கு.

எதிரிகளின் செய்கையைக் கண்டு கலங்காமல், ஆர்வத்தோடு, தான் கொண்ட கொள்கைக்காக உற்சாகத்தோடு உழைக்கும் உறுதி வேண்டும் பொது வாழ்வில் ஈடு பட்டுள்ளவர்களுககு

கிண்டல் பாணம், கேலிவம்பு, துணிச்சலான தூஷனம், வசை வாள் எல்லாம் நம்மைத் தாக்கு. ஆனால், சலியும் இதயம் படைத்தவரல்ல நாம் எதையும் தாங்கும் இதயம் படைத்த இலட்சிய வீரர்கள் நிறைந்த அறிவுப் பாசறை தான் நமது திராவிட முன்னேற்றக் கழகம். ஆகவே எவ்வித மனச்சோர்வோ மனக் கசப்போ நம்மிடையில் நிச்சயமாக தலைதூக்கக் கூடாது. தன்னடக்கம், தன்னம்பிக்கை நம் வாழ்வின் இலட்சியம்.

தஞ்சை, திருச்சிமாவட்டங்களில் புயல் தெளித்த சோகவிதை மிகப்பெருத்த அளவிலே சேதத்தைத் தந்தது. வீடிழந்த மக்கள் கண்களை கடலாக்கிக் கொண்டனர். குடிசைகள் காற்றில் பறந்தன, கால் நடைகள் காணவில்லை. வண்டியில் பூட்டப்பட்ட மாடு கள் மாண்டன. மக்கள் பலரும் இரையாயினர். இடித்த இடிக்கும், கனத்தமழைக் காற்றுக்கும்.

தென்றல் தென்றலென தெம்மாங்கு பாடிய தேசியவாதிகள் வாயிலே புயல், புயல் என்ற புதிய கீதம், பூரித்த உள்ளங்களிலே புலம்பல். சலித்த முகங்களில் சிந்தனைத் தோற்றம். சிந்தனைச் சிங்கங்கள் சிலந்தையாக மாறின. மருட்சியடைந்தனர் மக்கள் புயலால்.

மாளிகைகள் மறைந்தன. அதே நேரத்தில் மண் குடிசைகள் கடலிலே மிதந்தன. ஆடையிழந்து ஆதரிப்பாரற்று அங்குமிங்குமாக ஓடி அலைந்தனர். அவர்களுக்கு உதவவே தஞ்சை புயல் நிவாரண நிதி குழு உருவாயிற்று.

நிவாரணத்திற்கு ரூபாய் 25,000 தேவையெனக் கருதினோம். அந்தத் தொகை மிக மிகச் சொற்பம் காசு படைத்தவர்களுக்கு, மாளிகையின் உள்ளே மஞ்சத்தில் கொஞ்சும் மகுடாதிபதிகளுக்கு, ஆனால் நமக்கு குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிக மிகப் பெரிது. பக்தர்களல்ல நாம் பஜகோவிந்தம் பாடிப் பணம் திரட்ட, செல்வச் சீமான்களல்ல சரியென்று 'செக்' எழுதித் தந்துவிட. சாதாரணமானவர்கள். நடுத்தர குடும்பத்தினர், நாதியற்றவர்கள், நம்மால் ரூ, 25,000, தரமுடியுமா என்ற சந்தேகத்தில் மயங்கினோம், இந்தத் தொகை நம்மால் நிச்சயமாக எவராலும் தரமுடியாது.

நடிகர் இராமச்சந்திரனைக் கேட்டால் நான் மறுபடியும் காங்கிரசுக்கு போய்விடுவேன் என்று கூறலாம். கருணாநிதியைக் கேட்டால் கடுமையான

கட்டளை என்று கூறுவார். இப்படியே மோகனை மியற்றுவர். அண்ணாத்துரையே கொடு ரூ, 25,000 என்று என்னைக் கேட்டால், நான் ஹர ! ஹர சிவ சிவ சம்போ என்று ஓடி எடுக்க வேண்டியதுதான்.

ஆகவே பஞ்சத்தாண்டிகளான நம்மால், பொது மக்களின் ஆதரவால் சேர்க்கப்பட்டதுதான் இதோ உங்கள் முன் காட்சியளிக்கும் இரண்டு லாரி ஆடைகள். அதைக் கண்டு பூரிப்படைகிறேன். உள்ளம் மகிழ்கிறேன். வழங்கப்படவிருக்கும் துணிகள் உயர்ந்த ரகத் துணிகளல்ல ! எல்லாம் முரட்டுத் துணிகள் மண் வெட்டும் மக்களுக்கு மானமிழந்த மங்கையருக்கு.

இது மகத்தான காரியம் மட்டுமல்ல. உள்ளபடியே நமக்கு மகிழ்ச்சியும், மாற்றாருக்கு மிரட்சியையும், ஆட்சியாளருக்கு அதிர்ச்சியையும் தரக்கூடியது.

புயல் தந்த தொல்லைப் பரிசுகளை அனுபவித்துள்ள தஞ்சை, திருச்சி, பெருங்குடி மக்களுக்கு செல்லவிருக்கும் இந்த ஆடைகளை உள்ளபடியே அரசியலார் சார்பில் செலுத்தத்தான் ஆசைப்படுகிறோம். ஆனால் திராவிடத்தின் துரதிருஷ்ட வசத்தினால் தென்னாட்டுக் கவர்னர் தமிழரல்ல. திராவிடம் பெற்ற திருமணியல்ல! ஆனால், வடநாட்டின் வாரிசு, டெல்லி ஆட்சியின் கைப் பாவை. செந்தமிழறியாத செல்வ பூபதி. நேருசர்க்கார் நேரடியாக அனுப்பிய முதலாளித்துவத்தின் பிரதிநிதி. அந்தத் துக்ககர

மான காரணத்தினால்தான் கவர்னரவர்களை அழைத்து இங்கு அடுக்கப்பட்ட ஆடைகளைத் தந்து தஞ்சைத் தமிழர்கட்குத் தரமுடியவில்லை. மிக வருத்தத்துடன் குறிப்பிடுகிறேன்.

எனவேதான் தஞ்சை, திருச்சி ஆகிய மாவட்டங்களுக்கு கலெக்டர் மூலமாகத் தர ஏற்பாடு செய்துள்ளேன்.

இவ்வளவு மகத்தான ஆடையளிப்பு விழா நடத்தும் நம்மை அரசாங்கம், பாராட்டாமல் பழிக்கிறதே, போற்றாமல் தூற்றுகிறதே! வாழ்த்துப் பட்டியலைத் தராமல் வசை புராணத்தை வீசி மகிழ்கிறதே! அரசாங்கத்தின் "போக்குத் தவறு" என்று எனக்கு முன் பேசிய தம்பிகளும் தலைவரவர்களும் குறிப்பிட்டனர். ஆனால் இது அல்ல நாம் எதிர்ப்பார்ப்பது.

இவ்வித மறுமலர்ச்சியை உண்டாக்கித் தந்த எனது ஆசைத்தம்பிமார்களை களிப்புடன் பாராட்டுகிறேன். அந்தப் பாராட்டுதலுக்கு பாராட்டு பெறுவோர்களில் எனது அரும் பெரும் தலைவர் ஈ. வெ. ரா. அவர்கள் பெயரும் ஜொலிக்கிறது. தெரிந்தோ, தெரியாமலோ, விட்டக் குறையோ, தொட்டக் குறையோ! அவர் ரூபாய் ஐந்தோ பத்தோ தந்துள்ளார். தஞ்சை நிதிவசூலின்போது அவருக்கு எனது நன்றி.

நாம் சேகரித்த நிதிபனியாக்களின் பரம்பரையிடமிருந்தோ, டால்மியாக்களிடமிருந்தோ அல்ல. அல்லும் பகலும் அன்றாடம் வயிற்றுக்குப்போராடும் மக்க

ளிடமிருந்து, ஏழை எளியவன் பஞ்சை பராரி என்ற பலவகைப்பட்டவர் அளித்த பரிசு.

கோழி கூவியழைப்பதை அலாரக் கடிகாரமாகக் கொண்டு வயலுக்குச் சென்று பயிரிடும் நண்பர்களி னல், ராமராஜ்யத்திலே புழுக்களாக, பஞ்சத்தின் பது மைகளாக, பசியின் பவளங்களாகப் பரிமளிக்கும் பாட்டாளிகளினல், ஆலையிலே நெற்றி வியர்வையைத் துடைத்து துணி உற்பத்தி செய்யும் தொழிலாளர்களி னல் தரப்பட்டவை.

அப்படிப்பட்ட வள்ளல் நெஞ்சுள்ள உள்ளங் களைப் பூரிப்புடன் பாராட்டுகிறேன். திராவிட முன் னேற்றக்கழகச் சார்பில் நன்றியைக் காணிக்கையாகச் செலுத்துகிறேன்:

இந்த உதவி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்மால் அளிக்கப்படும் சிறிய உதவியானலும் இதயப் பூரிப்புடன் செய்கிருேம். செய்வதையும் திருந்தச் செய் என்கிறபடி.

நாம் அளிக்கும் உதவி மாடமாளிகையில் வாழும் மகான்களுக்கல்ல. தினமும் உழுது பயிரிடும் பஞ்சை விவசாயிக்கு, ஆடையின்றி அவதிப்படும் நமது அருமை திராவிடத் தோழர்களுக்கு. காலை முதல் மாலை வரையில் கையில் கலப்பையை ஏந்தி, கரடுமுரடான நிலத்தை நஞ்சையாக்கி, நாம் உண்ண உணவளிக்கும் உத்தமனுக்கு என்பதை நினைக்கும்போது, உள்ளம்

பூரிப்படைகிறது. மனதிற்குமட்டிலா மகிழ்ச்சியைத் தருகிறது. உண்டா? இதைவிட ஆனந்தம்.

பஞ்சத்தால் பரதவிக்கும் மக்களுக்கு நாம் செய்யும் இந்த உதவி விளம்பரத்திற்காக அல்ல. விளம்பரம் தேவைப்படும் கட்சியாக நாம் இல்லை. இருக்கவும் மாட்டோம்.

போராட்டங்கள் பல கண்டுள்ளோம். போலீஸ் தடியடி, குத்து, குண்டு வீச்சுகளையும் தாங்கியுள்ளோம். திராவிட மக்களின் நன்மைக்காக, நாடாள்வோரின் எந்த செய்கைக்கும் அஞ்சாமல் உழைக்கக் காத்திருக்கிறோம்.

அரசியல் வேறு, புரட்சி என்பது வேறு எதையும் அறிந்தே பணியாற்றி வந்திருக்கிறோம். எந்த காரியத்தையும் சிந்தனைக்கு வேலை தந்தே செய்திருக்கிறோம்.

திராவிடநாடு பெற போராட முற்பட்டுள்ளோம். இந்த போராட்டத்தில் நாம் கடைபிடிக்க வேண்டியவை பல.

நம்மிடம் ஒற்றுமை வளரவேண்டும், ஒழுங்குமுறை கற்றுக்கொள்ள வேண்டும் கூட்டத்திற்கு வரும் அன்பர்கள் அதை அறிந்து நடக்கமுற்படுவது நலம்.

நீங்கள் ஒழுங்கு தவறி நடக்கமுற்பட்டால் அண்டையில் உள்ள தாய்மார்கள் சங்கடப்படநேரிடும்

அமைதி குறை வேற்படுமானல் அவர்கள் அவதிக்குட் படுவார்கள். அது கூடாது கூட்டம் முடியும் வரையில் ஒழுங்கு முறை தவறாது நாம் நடந்துகொள்ளவேண்டும். என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

புயல் நிவாரணத்திற்கு உதவிய உங்கள் யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு பேச்சை முடிக்கிறேன்.

வணக்கம்.

தலைவர் அவர்களே! தோழர்களே!!

காலையிலிருந்து இதுவரை டவுன் ஹாலில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்திற்கும், இவ்வளவு பெருந்திரளான மக்களைக் கூட்டி நடத்தப்படும் இப் பொதுக் கூட்டத்திற்கும், சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து உதவிய உள்ளூர் கழகத்தோழர்களுக்கும், வட ஆற்காடு மாவட்ட கமிட்டி யினருக்கும் கழகச் சார்பில் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த ஊருக்கு நான் பலமுறை வந்திருக்கிறேன். அன்று அன்புடன் வர வேற்ற தோழர் பக்த வத்சலம் இன்று நம்மோடு இருக்கிறாரா இல்லையா? சட்டசபை துணைத்தலைவரா, சர்க்காரின் பாது காவலரா? அவர் ஊரில் இருக்கிறாரா, அல்லது எங்கிருக்கிறார் என்பதைப் பற்றி கவலைப் படாமல் நமது கழகம் வளர்ந்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் எதிரிகளால் நசுக்கப் படுவதை விட, சில சமயங்களில் நண்பர்களால்தான் அதிகம் நசுக்கப் படுகிறது. எனினும், நாம் வலு வூட்டிய கரங்கள் தானே அவைகள். அக் கரங்கள் தனது பயிற்சிக்காக நம்மையே நசுக்குகின்றனவே என்று கருதி நான் பொருட் படுத்துவதில்லை. எனவே எதிரிகளாலும், சில சமயங்களில் நண்பர்களாலும், நமது கழகம் நசுக்கப் பட்டாலும் கூட அது தனது உண்மையான தொண்டினால் வளர்ந்து வருகிறது.

எனக்கு முன் நண்பர்கள் பேசிய பேச்சுக்களை யெல்லாம் கேட்டீர்கள். அவைகள் அனைத்தும் தொகுத்து சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் கூறுவ தெல்லாம் பத்திரிகைகளில் வந்த செய்திகளே தவிர, இல்லாதவைகளை எடுத்துச் சொல்லி வம்பு பேசுபவர் களல்ல.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகத்தான பணியை மக்கள் உணர்ந்து வருவதால் அதன் கொள் கைக்கு நாடெங்கும் ஆதரவு தந்து வருகின்றனர். ஆனால் மாற்றுக் கட்சியினரோ எங்களைக் கண்டால் பொறாமைப் படுகின்றனர். இதற்கு காலம்தான் பதில் கூற வேண்டுமே யன்றி நாங்கள் அல்ல.

தோழர்களே, எப்படிப்பட்ட பாட்டாளியும் மற்ற நாட்டை விட இந்நாட்டில் தான் அதிகமாகக் கஷ்டப் படுகின்றான்.

அமெரிக்காவில் நீக்ரோக்கள் என்றால் செந்தமிழ் நாட்டில், அந் நாட்டுக்குரிய திராவிடர் கடுமையான கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகி தவிக்கிறார்கள். வேலை யில்லாக் கொடுமை, பஞ்சத்தால், பட்டினியால், பெற்றெடுத்த கண் மணிகளைக் காப்பாற்ற வழியின்றி தவிக்கும் பரிதாபம் ஆகியவைகளிடையே மரக்கிளை யில் தூக்கிலிட்டுக் கொள்ளும் குடும்பங்கள் எத்தனை? ஊரை விட்டு ஓடுகிறவர்கள் எத்தனை பேர் ஆயிரம்? இவைகளுக் கெல்லாம் காரணம் என்ன வென்று கேட்கிறேன். பக்தி குறைவினாலா? எங்களில் சில பேருக்கு வேண்டுமானால் அப்படி யிருக்கலாம். ஆனால்

நாட்டிலுள்ள அத்தனை பேருமா நாஸ்திகர்கள்? சுய மரியாதைக் கட்சிக் காரர்கள்?

நாம் வெட்டாத குளம் உண்டா! கட்டாத கோயில் உண்டா! பண்ணாத பாலாபிஷேகம் உண்டா? தேர், திருவிழா, ஆண்டுதோறும் ஆண்டவனுக்கு கல்யாணம், முதல் ஆறுகால பூஜைகளுக்குத்தான் குறைச்சல் உண்டா? நமது பாட்டாளித் தோழன் மூட்டை தூக்கும் போது கூட ராமா என்று சொல்லிக் கொண்டு தானே தூக்குகிறான். எனவே பக்தி குறைவால்தான் நாட்டிலே பஞ்சம், பட்டினி, மழை யில்லாமை என்று ஆச்சாரியார் அடிக்கடி கூறுவது வடி கட்டிய அரசியல் சாணக்கிய மாகும்' எனவேதான் நண்பர் பொன்னம் பலனார் பேசும் போது சமுதாயத்தில் மறுமலர்ச்சி தேவை யென்று வலியுறுத்திக் கூறினார்.

உலகத்தில் எங்குமே காண முடியாத எண்ணிக்கை யில் ஜாதிப் பிரிவுகளும், அதன் காரணமாக மக்க ளிடையே பேதா பேதங்களும் வேறு பாடுகளும் மலிந் திருக்கின்றன.

அமெரிக்காவிலே ஹாரிசன் முதலியார் என காண முடியுமா? லண்டனிலே கிரிப்ஸ் செட்டியார் உண்டா? விஞ்ஞானத்தோடு போட்டி யிட்டு நாள் தோறும் பலவித அற்புதங்களைக் கண்டு பிடித்து வரும், மேல்நாட்டவருக்கு ஜாதி வித்தியாசமும், ஜாதிப் பட்டங்களும் அவசியமான தென்று தெரிந்தால் அவர் கள் நம்மை விட அதிக ஜாதிகளை உண்டாக்கி இருக்க மாட்டார்களா? எனவே மக்களது ஒன்றுபட்ட

வாழ்க்கைக்கு தடங்கலா யுள்ள ஜாதி வெறியைத் தகர்த்தெறிய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கூறுவது நாஸ்திகமாகுமா ?

பீமனைக் கண்ட பரத கண்டம் வந்தவரிடத்திலெல்லாம் அடிமைப் பட்டதேன் ? அவர்களது எதிர்ப்பை நமது ஆண்டவன்களும், ஆயுதங்களும் ஏன் தடுக்க வில்லை ? இவை எல்லாம் தேசியத் தோழர்கள் சிந்திக்க வேண்டும் என்றுதான் தி. மு. கழகம் கூறுகிறது.

தோழர்களே !

நம், நாட்டிலிருந்து லட்சக் கணக்காக பாட்டாளி மக்கள் ஏன் வெளி நாட்டுக்கு ஓட வேண்டும் ? நம் நாட்டிலே எது இல்லை ? நான் பலமுறை ஆதாரத்துடன் கூறி யிருக்கிறேன்.

இயற்கை வளம் மிகுந்த நமது நாட்டிலிருந்து, பிற நாட்டுக்கு நம் தோழர்கள் ஓடுவதா ? இதற்காக ஆட்சி பீடத்திலுள்ள ஆச்சாரியாரோ அல்லது மற்றவர்களோ கவலைப்பட்டதுண்டா ? ஓயாது உழைக்கும் தொழிலாளிக்கு ஒரு கவளம் சோறு கிடைக்க வில்லையே ஏன், இதற்குக் காரணந்தான் என்ன ?

இறைக்கின்ற தண்ணீர் தோட்டத்தில் சேரவில்லையென்றால் குடத்தில் ஓட்டையிருப்பதால்தானே. அதை அடைக்கவேண்டுமென்று கூறினால் தேசத் துரோகமாயென்று கேட்கிறேன். அதேபோல் எல்லா

இயற்கை வளப்பமுடைய நம் நாட்டில் பிழைக்க வழியில்லாது வெளிநாட்டிக்குப் பாட்டாளி ஓடுகிறான்.

நம் நாட்டுப் பணமும், வளப்பமும் டெல்லி ஆட்சி, பீடத்தில் குவிந்தால் நாம் எப்படி வாழ முடியும் ?

டெல்லி சர்க்காருக்கு கமிஷன் ஏஜெண்டுபோல நமது சர்க்கார் செயலாற்றுகிறதே யன்றி சுதந்திர முடன் ஆண்டால் ஏழை நடுத்தர மக்களுக்கு கொடுமைகள் நிரந்தரமாக நிலைத்திருக்க முடியுமா ?

நமது நாடு பிரிக்கப்பட்டால் நாசம் விளையும் என்று வாய் கூசாது, கூப்பாடு போடும் மேதாவிகளைக் கேட்கிறேன். பிரிந்த நாடுகளில் இன்று எந்தெந்த நாடு இந்தியாவிடம் பிச்சை கேட்கின்றன ? இன்னும் சொல்லுவேன், முப்பது கோடி மக்களைக்கொண்ட இந்தியா, எண்பது லட்சம் மக்களைக்கொண்ட இலங்கையிடம் அரிசிக்கும், அரசியல் நெருக்கடி தீரவும் கைக் கட்டி நிற்கிறதே!

நாட்டுப் பிரிவினைக்காக போராடும் எங்கள் பாசறையில் ஆயிரக்கணக்கில் தோழர்கள் பணியாற்றுகிறார்கள். பல்லாயிரக்கணக்கில் வந்துகொண்டே இருக்கிறார்கள். ஆகையால், இதனின் ஜீவசக்தி என்ன என்பதை ஆட்சியாளர் உணரவேண்டும்.

144 தடையுத்திரவுகள், புத்தகங்களுக்குத்தடை மற்றும் அடக்குமுறையை கண்ணை மூடிக்கொண்டு எங்கள் மீது ஏவி விட்டாயே, நான் எழுதிய புத்தகத்

திற்கு தடை விதித்தாய். சிறைக்கனுப்பினாய், 750 ரூபாய் அபராதவும் விதித்தாய் உயர்நீதி மன்றம் சென்றேன். அடக்கு முறையை வீசிய சர்க்காரின் மானம் தூள், தூளாயிற்று.

750 ரூபாய் அபராதத்தை திருப்பி கொடுத்து விடுமாறு உயர்நீதி மன்றம் புத்தி கற்பித்தது, இன்னும் சொல்லுவேன் நான், இது வரை அந்த 750 ரூபாயை திரும்பியும் வாங்கவில்லை. நமக்கு கடன் பட்ட சர்க்கார் இன்றைய சென்னை சர்க்கார்.

இது மட்டுமா ? இந்த சர்க்கார் ஊழல் மலிந்த சர்க்கார் மககளைக் காப்பாற்றத் தெரியாத சர்க்கார் கையாலாகாத சர்க்கார் கண் குருடாகி காது செவிடாகி, போலீஸ் உதவியை நாடி ஆட்சி செய்யும் சர்க்கார் என்று பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறேன்.

தங்களின் நிர்வாகம் சரியாய் இருக்கிறதா இல்லையா? யென்பதற்கு நிபுணத்துவம் என்ற பேரால் அமெரிக்கர்களை வாரந்தோறும் வரவேற்கிறதே சர்க்கார்.

ஒருவன் தனது மனைவியின் கற்பைப்பற்றி எதிர் வீட்டுக்காரனிடம் விவரம் கேட்பதைப்போலில்லையா ?

எனவே, அமெரிக்க நாட்டுக்கு தம் நாட்டின் தன் மானத்தை அடக்கு வைத்திருக்கிறது நேரு சர்க்கார் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன்.

ஆறு ஆண்டுகளிலே எத்தனை ஆலைகளை கட்டினாய்? எத்தனை பேருக்கு வேலை கொடுத்தாய், மின்சாரத்தைக் கண்டு பிடிக்க முடியாமல், வெள்ளையன் கண்டு பிடித்த மின்சாரத்தைக் குறைப்பதற்கு திட்டம் போடுகிறாயே, தொழிலாளர் இதனால் தொல்லை படுகின்றனரே.

நேரு ஆட்சியிலோ, ஆச்சாரியாரின் ஆட்சியிலோ, ஆசிரியர்களுக்கு, அதிகாரிகளுக்கு—மாணவர்களுக்கு, டாக்டர்களுக்கு, நர்சுகளுக்கு, ஏழைகளுக்கு, எளியவர்களுக்கு, யாருக்காவது நிம்மதியுண்டா?

நகீப் அந்நாட்டு மக்களுக்கு வாழ்வளித்தார். நகாஷ்பாட்சாவையும், அவரது மனைவியையும் கூண்டில் ஏற்றினார். நேரு அவ்விதம் கேட்டாரா, கேட்பாரா? அவர் இல்லாவிட்டாலும் காங்கிரஸ் தோழர்களாவது கேட்டார்களா? நம நாட்டிலேயுள்ள நாசக்காரர்களை நோக்கி!

நாங்கள் இவ்வாறு கூறுவதை மறுக்கத்தான் முடியுமா? எனவே அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டு பேரம் நடத்தும் டெல்லி ஆதிக்கத்திலிருந்து விடுபட திராவிட முன்னேற்றக் கழகம் போராடுவது தேசியத் துரோகமாகுமா?

அன்று ஜின்னாவைக்கூடத்தான் கேலி செய்தாய்? கோடையிடிகளிலிருந்து மாரிகாலத்து தவளைகள் கூட கத்தின. கைபர் கணவாய் வழி வந்தவனுக்கு பாகிஸ்தானா என்று மிரட்டினாய்? இறுதி

யில் ஜின்னு கேட்டதைவிட அதிகமாக அளந்து கொடுத்தாயே !

பாகிஸ்தான் பிரிவினை காரணங்களைவிட, பன் மடங்கு மேலான காரணங்களும், அதைவிட இந் நாட்டுக்கே சொந்தக் காரர்களான திராவிடர்கள், நாங்கள், எங்களது திரு நாட்டைக் கேட்டால் இல்லை யென்று மறுக்க நீ யார்? என்று கேட்கிறேன், டெல்லி ஏகாதிபத்தியத்தை

நாட்டுப் பிரிவினையை அமைதியாக, பலாத்கார மின்றி பெறவே திராவிட முன்னேற்றக் கழகம் மன தார விரும்புகிறது. ஆனால் பலாத் காரத்தினால்தான் நாட்டுப் பிரிவினையைப் பெறவேண்டும் என்று ஆதிக் கக் காரர்கள் தாங்களாகவே விரும்பினால் அதனின் விளைவுகளும், பழிகளும் டெல்லி சர்க்காரையே சாரும் என்பதை எச்சரிக்கிறேன்

வணக்கம்.

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே!! தாய்மார்களே!!! உங்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இரண்டு நாட்களாக இங்கு நடைபெற்ற மாநாடுகளைக் கண்டு களித்தீர்கள்.

நேற்று நடைபெற்ற பெண்கள் மாநாட்டிற்கு நான் வர இயலாமற் போயிற்று. வருந்துகிறேன். தாய்மார்கள் பொறுத்திடக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆடவரின் கொடும் செயல்களைத் தங்கு தடையின்றி எடுத்துப் பேச வாய்ப்பளிக்க, பெண்கள் மாநாட்டிலே ஆடவர்கள் வராதிருப்பதுகூட ஒருவகையிலே பொருத்தமாக இருக்கலாம் என்று கூடக கருதுகிறேன்.

நான் மாநாட்டுக்கு வரவில்லையே தவிற, நிகழ்ச்சிகளை விசாரித்தறிந்தேன், வரவேற்புரை, தலைமை உரைகளை சென்னையிலேயே படித்துப் பார்த்து மகிழ்ந்தேன். எவ்வளவு ஆர்வம் ததும்புகிறது வீர உணர்ச்சி எழுகிறது தாய்மார் உள்ளங்களிலே என்பதை அந்த உரைகளிலே கிடைக்கப் பெற்று பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

தாய்மார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எப்போதுமே துணை நின்று பெரும்பணியாற்றி வந்திருக்கிறார்கள். பிரச்சாரப்பணி மட்டுமல்ல, திராவிட

முன்னேற்றக் கழகம் எடுத்துக்கொண்ட எல்லா நேரடி நடவடிக்கைத் திட்டங்களிலும் ஈடுபட்டு, தீவிரமாகப் பாடுபட்டிருக்கிறார்கள்.

சர்க்காரின் அடக்கு முறைத் தாக்குதலையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வீரத்திராவிடத் தாய்க்குலம் வேறெப்படி இருக்கமுடியும்! அவர்கள் உரம் ஊட்டி இனத்தை வளர்ப்பவர்கள்! வாழ்க தாய்க்குலம்! வளர்க அவர் தம் வீரம்! என்று போற்றாதிருக்க முடியாது.

திராவிடநாடு தனி அரசு ஆனால்தான் பெண்ணடிமை ஒழியும், என்ற உண்மையை எடுத்துக்காட்டி வரவேற்புரையில் தோழியர் ராஜம்மாள் அவர்கள் திராவிடநாடு அமைக்கத் தாய்மார்கள் பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆர்வம், எந்த வகையிலே மலர்கிறது என்பதும் அம்மையாரின் உரையிலே காணக்கிடக்கிறது.

பொதுத்தேர்தலிலே ஈடுபட்டு, சட்டசபைகளைக் கைப்பற்றி, திராவிடத் தனி அரசு பிரகடனத்தை வெளியிடவேண்டும் என்று அம்மையார் கூறியிருக்கிறார்கள். எழுச்சியூட்டும் கருத்து.

திராவிட முன்னேற்றக் கழகம் இது பற்றி, முறைப்படி எண்ணிப் பார்த்து, தக்க திட்டத்தைத் தீட்ட முன் வரும் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

அரும்பெரும் காரியங்களைப் பெண்கள் செய்ய இயலும் என்பதை எடுத்து விளக்க, தலைமையுரையிலே, அரிய வரலாற்று உண்மைகள் எடுத்து விளக்கப்பட்டுள்ளன. இயக்கத் தோழர்களின் இல்லங்களிலே உள்ள தாய்மார்களை எல்லாம், பெண்கள் மாநாட்டிற்கு வந்து கலந்து கொள்ளும்படி செய்யும் பொறுப்பையும், மாநாடு நடத்தியவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மனைவியை இயக்க காரியத்திலே பங்கு கொள்ளும்படித் தூண்டும் செயலில், பெரும் பாலான கணவர்களால் வெற்றி பெற முடிவதில்லை. நான் சொல்லுவதற்கு பதிலாக தோழியர் சத்திய வாணி முத்து, ராணியிடம் வந்து பேசி, 'ராணி! வா! மாநாட்டுக்கு' என்று அழைத்தால், காரியம் சுலபமாக முடியும். ராணி, ராணி என்று நான் சொல்வது, ஊரை ஆளும் ராணியை அல்ல, என் உள்ளத்து ராணியை, துணைவியைக் குறிப்பிடுகிறேன்.

பெண்கள் மாநாடு மூலம் கிடைத்துள்ள பேரார்வம், திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பெரிதும் பயன் படும், சந்தேகமில்லை.

இரண்டாம் நாளாகிய இன்று எல்லாம் உபதேச காண்டமாக முடிந்தது. மாநாட்டிலே அமைதியில்லாததால், பேச்சாளருக்கு ஆர்வமில்லை. ஆர்வமில்லாததால் நல்ல கருத்துகளை சொல்ல முடியவில்லை. ஆகவே பலர் கண்டித்தார்கள். அப்போது நான் கவலைப் படவில்லை.

இங்கே அமர்ந்திருக்கிற நண்பர்களெல்லாம் நமது கட்சி காரர்களாக இருந்திருந்தால் இந்த சிறு, சிறு இடஞ்சல்கள் இருந்திருக்காது. என்றாலும் உங்களிடையே காணப்படும் ஆர்வத்தை பாராட்டுவோம்.

இன்று இங்கே பல நல்ல தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கிறீர்கள். தூத்துக்குடி நண்பர் காலையிலே போராட்டம் வேண்டுமென்றார். பொதுச்செயலாளராகிய நான் கொஞ்சம் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று கூறினர்.

முதலிலே நான் வர வேற்கிறேன். யோசிக்கும் போது வருத்தமடைகிறேன். ஏனென்றால் ஆற்று வெள்ளம் பெருகட்டும் பயிர் செழிக்கட்டும். பின்பு களை தோன்றினல் நீக்கி விடலாம். மாடு புகுந்தால் விரட்டலாம், அதை எப்போது செய்ய வேண்டுமென்ற நேரமும் எனக்குத் தெரியும். ஆனல் சிலருக்கு பயிர் தெரிவதில்லை. களை மட்டும் தெரிகிறது.

இப்படி அவர்கள் சொல்வதற்கு காரணம் ஒரு வேலை களை அதிகமாகி பயிர் குறைந்து விட்டால் என்ன செய்வது என்ற கவலையாக யிருக்கலாம். எனவேதான் தூத்துக்குடி நண்பர் என்னை கொஞ்சம் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்றார்.

கழகத் தோழர்களின் கருத்தை அறிவதில் நான் மிகவும் ஆவல் கொண்டவனுக இருக்கிறேன். களை எடுக்கிறேன் என்று கூறிக் கொண்டு, வளரும்

பயிரையும் பாழ் படுத்தக் கூடாது. பயிர் பாழாகும் படி களை வளரவும் விடக்கூடாது. களை அறிந்து எடுத்திட வேண்டும்.

இந்த உழவு முறை அரசியல் பண்ணைக்கும் பொருந்தும். கண்டிப்பு, கட்டுப்பாடு, தேவை. களை எடுத்தல் தேவை. அதேபோது பயிர் அழியக் கூடாது. கருத்துக்கு விளங்கிடக் கூடாது. இதுதான் கையாளும் உழவு முறை.

பெரும் அளவிலே கூடி யிருக்கிறீர்கள். தாய் மார்கள் ஏராளம். இங்கு, ஏற்படும் பேச்சொலி, அமைதியைக் குலைக்கிறது என்று என் நண்பர்கள் யாவரும் கடிந்துரைத்தார்கள். மாநாடுகளில் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று எடுத் துரைத்தார்கள்.

நாம் கட்டுப்பாடுடன் பழக வேண்டும். அதே போல் நண்பர்களும் தங்கள் கருத்துக்களை அறிவிக்க வும், மாற்றுக் கட்சி நண்பர்களின் சந்தேகங்களை துடைக்கவும், நம்மைப் பார்த்து அச்சம் கொள்வோர் களின் அச்சத்தை போக்கவும், நம்முடைய கருத்துக் களுக்கு ஆதாரம் தேடி புள்ளி விபரங்களை தரவும், நாட்டிலே உள்ள பிரச்சினைகளை அலசி பார்க்கவும், நம்முடைய லட்சியத்தை எடுத்துச் சொல்லவும், இம் மாநாடுகளைப் பயன் படுத்தி கொள்ள வேண்டும்.

ஏனென்றால் நம்முடைய குறைகளையும் மற்றவர் களிடம் சொல்வதற்கு தூத்துக்குடி நண்பர் சொல்வது

76080

போல் (ஏன் தூத்துக்குடி நண்பர் என்று சொல்கிறேனென்ருல், நண்பர் சிவசாமியையும், தங்கப் பழம் அவர்களையும் பெயர் மாற்றி அழைப்பது உண்டு. யார் தங்கப் பழம், யார் சிவசாமி என்று எனக்கு அடிக்கடி சந்தேகம் வந்து விடும்) தனியாக இயக்கத் தோழர்களுக்கு மட்டும் மாநாடு ஒன்று நடத்த வேண்டுமென்ருர்.

ஆனல், பொதுக்குழு அதற்காகத்தான் இருக்கிறது. நம்மிடையே உள்ள குறைகளைப் போக்கி கட்டுப்பாட்டை வளர்க்க வேண்டுமென்று வலியுறுத்தினீர்கள். இங்கே வருகிறவர்கள் அனைவரும் நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் கட்டுப்பாடு அதிகமாக வளர்வதோடு, நம்மிடையே நம்பிக்கை வளர ஏதுவாகும்.

நமது பிரச்சாரத்தைக் கேட்பவர்கள், நாளையோ, மறுநாளோ, பட்டித் தொட்டிகளில் சென்று, மாநாட்டுக்குச் சென்றேன். எதிர்க்கட்சியினரின் மறுப்புரைகளுக்கு தக்க சமாதானம் சொன்ஞர்கள். எனக்கு இருந்த சந்தேகங்களைப் போக்கிஞர்கள். ஆகவே நான் இந்த இயக்கத்தில் சேருகிறேன்" என்று சொல்லவேண்டும்.

அது மாத்திரமல்ல, இவ்வளவு பெரிய மாநாட்டில் கட்டுப்பாடு ஏற்படவேண்டுமென்ருல் சொஞ்சம் சிரமப்தான் இந்தக்காட்சி கிடைக்காமல் ஏங்கித் தவிக்கும் கட்சிகள் இல்லையா? இப்படிப்பட்ட காட்சிகளைக் காண வேண்டுமென்று 'தவம்' கிடக்கும் கட்சிகள் எத்தனை

தெரியுமா ? இவ்வளவு பெரிய கூட்டத்தைக் காண முடியுமா ?

எத்தனை கட்சிகள் இதுபோன்ற காட்சியைக் காண முடியாததால் அங்கலாய்த்துக் கொள்ளுகின்றன, என்பதும் எனக்குத் தெரியும்.

எனவே, இங்குநான் காணும் காட்சி, கொட்டகை நிரம்பியுள்ள மக்கள் கூட்டம். தி. மு. கழகம் பெற்ற வெற்றிகளில் ஒன்று; பெற வேண்டிய வெற்றிகளுக்கு வாய்ப்பளிக்க வல்லது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் இத்தனை மலர்ந்த முகங்களை நான் பார்க்கவே இல்லை.

அப்போதெல்லாம் மாநாடு என்றால் நாற்பது ஐம்பது கார்கள் வரும். காரில் இரண்டுபேர்கள்தான் வருவர். அதிலே டிரைவருக்குத்தான் நம்மீது அனுதாபம் இருக்கும். ஆகவே இப்போது மலர்ந்த முகங்களைப் பார்க்கும்போது பெருமைதான் ஏற்படுகிறது.

இவ்வளவு பெரிய சக்தியை வைத்துக் கொண்டு அதை பயன் படுத்தாமல் இருக்கின்றீர்களே என்று கேட்கிறார் தூத்துக்குடி நண்பர்.

சந்தனக் கட்டை கிடைத்தது என்று நான் மகிழ்ச்சி யடைகிறேன். கிடைத்த சந்தனக் கட்டையை சிற்பமாகச் செதுக்க வில்லையே என்று அவர் ஆயாசப் படுகிறார். காலம் வரும்போது கூர் முனையைக் கையிலேந்தி சிற்பத்தை உருவாக்குவோம். அது

வரையில் சந்தனச் சோலையில் கூடியிருக்கிறோம். அதைக் கண்டு மகிழ்வோம்.

இன்று தலைவர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் அமைதி வேண்டும் என்று சொன்னார். மாற்றுக் கட்சிக் காரர்கள் நம்மை எல்லாம் சினிமாக் கட்சிக காரர்கள் என்று கூறுகிறார்கள் என்றார்.

சினிமாக்கட்சி என்றால் இங்கே உள்ளவர்கள் எல்லாம், பேசுவோர் எல்லாம் சினிமாவைப்பற்றியே பேசுகிறார்கள் என்றால் தான். சினிமாக்கட்சி என்று பெயர்.

ஆனால், சினிமாத்துறையிலே ஈடுபட்டவர்கள், ஒரு கழகத்திலே கலந்து பணியாற்றுவது தவறா! சினிமா, அவர்களுக்கு ஒரு தொழில்! கொள்கைப் பற்றும், பொதுப்பணி புரிய வேண்டும் என்ற ஆர்வமும் அவர்களை இங்கே, அழைத்து வந்திருககிறது! இதிலே என்ன தவறு.

கள்ளுக்கடை வியாபாரிகள் சிலர் ஒரு கட்சியிலே ஈடுபட்டு இருந்தனரே, கட்சிக்கு கள்ளுக்கடை கட்சி என்று பெயரிட்டனரா, யாராவது. கற்பூரக் கடைக் காரர் யாராவது ஒரு கட்சியிலிருந்தால் அந்தக் கட்சிக்கு ஜோதி கட்சி என்று பெயரிடுவதா! என்ன அர்த்த மற்ற பேச்சு. ஆனால், ஏன் பேசுகிறார்களென்று புரியாமல் போகவில்லை. நன்றாகப் புரிகிறது.

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. ஆண்டுகள் ஆகிவிட்டன. சென்னை ஒற்றைவாடை கொட்டகை

யில் சந்திரோதய நாடகம் நடந்தபோது இசையரசு தண்டபாணி தேசிகர், நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன், பாகவதர், மூவரும் வந்தனர். பெரியார், ஒரு பிடி பிடித்தார். இந்தக் கலாவாணர்கள் முருகா, முருகா என மூன்று மணிநேரம் பாடிவிட்டு ஆயிரம் இரண்டாயிரம் என்று பணத்தைப் பறித்துக்கொண்டு போகிறார்களே ஒழிய. இனாபிமானம், சுய மரியாதை இவர்களுக்காக பாடுபடும், நமது இயக்கத்திலே ஒரு பற்று, பாசம், தொடர்பு துளியாவது காட்டுகிறார்களா! என்று கோபமாக பேசினார். என்ன, வரவழைத்து இப்படி உட்கார வைத்துக்கொண்டு ஏசுகிறார்களே என்று மூவரும் கேட்டனர். அவர்களுக்கு சமாதானம் கூறினேன். பிறகு நான் பேசும்போது, பெரியார் காரணத்தை விளக்கி கலைவாணர்களெல்லாம், கூடிய சீக்கிரம் நமது கழகத் தொண்டிலே ஈடுபடுவார்களென்று உறுதி அளித்தேன். அதுபோலவே கலைத் துறை விற்பன்னர்கள் இன்றும் நம்மிடம் உள்ளனர்.

பெரியார் சொன்ன முறைப்படிதான் நான் கலைத் துறையினரை கழகப் பணிபுரிய அழைத்து வந்தேன். பெரியாரே, ஒற்றவாடை கொட்டகையில்தான் பேசியதற்காக வருத்தப்பட்டு, அடுத்த திங்களில் ஈரோடு சென்று, கிந்தனார், காலட்க்ஷேபம் செய்த என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு. தங்கச்செயினும், கிந்தனார் என்று பெயர் பொறிக்கப்பட்ட டாலரும் பரிசளித்தார்.

ஈரோட்டில் நடைபெற்ற தனி திராவிடர் கழக மாநாட்டில் காந்தியார் படத்திறப்பு விழா நடத்த

என். எஸ். கிருஷ்ணன் அவர்களை வரவழைத்தார். தமது கையாலேயே கடிதம் எழுதி. அப்போதெல்லாம், 'சினிமா கட்சி' அல்ல இப்போது சினிமா கட்சி என்று ஏசுவதாக எண்ணிக்கொண்டு பேசுகிறார்கள். அந்தப் பழைய சம்பவங்களை அறிந்திருக்கிற எனக்கு ஏன் கோபம் வரப்போகிறது! அங்கு இல்லை இந்தக் கலை வாணர்கள். அதனாலே, ஒரு ஆத்திரம் அதைப்போக்கிக்கொள்ள எதையோ பேசுகிறார்கள்.

இதோ எனக்கு முன்பு தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் பேசினார். எதைப்பற்றி! ஜெனோவா படத்திலே எனக்கு எப்படி மேக்கப்செய்தார்கள் தெரியுமா? வலது கரத்தில் வாளை ஏந்தியதும், இடது கரம் எப்படியிருக்கவேண்டும் தெரியுமா? காமிரா அப்போது எங்கே யிருக்கும் தெரியுமா? என்று இதையெல்லாமா பேசினார். பேசினால் சினிமா கட்சிதான். அவர் பேசியது அது வல்லவே! அவருக்குத் தொழில், சினிமா! அதையுங்கூட பகுத்தறிவுத்துறைக்குப் பக்கபலமாக்குகிறார். இங்கு, மாநாட்டிலே அவர்பேசியது, சினிமா சம்பந்தமாகவா? இல்லையே! திராவிடர் திராவிட நாடு பெறுவது எப்படி, திராவிடச் சமுதாயத்திலே விழிப்புணர்ச்சி ஏற்படுவது எங்ஙனம்? கழகத்திலே கட்டுப்பாடு எப்படி இருக்கவேண்டும், மாநாடுகளிலே எப்படி ஒழுங்கு முறைகாணப்படவேண்டும், என்ற இவைபற்றி அல்லவா பேசினார்! இதற்கா சினிமா கட்சி என்று பெயர்! என்ன தெளிவு! ஏன் இந்தப் பேச்சு! அங்கே இல்லை, இங்கே உண்டு—அதுதான் காரணம்.

ஒரு நாடு விடுதலை பெறவேண்டுமானால் இனம் விழிப்படையவேண்டும் இனம் விழிப்படைந்தால் எல்லாத்துறைகளிலேயும் மறுமலர்ச்சி ஏற்படும்— அதை இன்று காண்கிறோம்.

எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் இன எழுச்சிக்கும், விடுதலைக்கும் பாடுபடவேண்டும் என்ற ஆர்வம் பிறக்கவேண்டும், அதன் விளைவுதான் தி. மு. கழகத்தில் ஏராளமான கலைத்துறையினர் ஈடுபடுவது. கழக வெற்றியிலே இது ஒரு கட்டம்—எழில் உள்ளது. எனவே மாற்றார் உள்ளத்திலே எரிச்சலை ஊட்டுகிறது.

மாற்றார்கள் மட்டரக மாகத் தீட்டித் திரிகிறார்கள். மனம் பொறுக்கவில்லை என்று நண்பர்கள் பேசினார் கள். ஆத்திரம் பிறக்கக்கூடாது. தூற்றல், வெறும் குப்பை — அது எருவுமாகும் நமது கழனிக்கு.

நாம் என்ன பருக்கின் தம்பியா? ஈரான் நாட்டு ஷாவா அல்லது அவனின் தூதுவர்களா? சாமான்யர் கள். சாமான்யர்களாகிய நாம் இவ்வளவு பெரிய பணி யாற்றுகிறோம் என்றால் இயற்கையாகவே பெறுமைப் படத்தானே செய்யும்.

பெரியார் தந்த கடைசி பாடம் எனக்கு, தூற்றலைத் தாங்கிக் கொள்வது எப்படி என்பதுதான். எனவே தூற்றல் கேட்டு ஆத்திரம் கொள்ளாதீர்கள். நமது சொல்லும் செயலும், தூற்றுவோரின் மனதையும் மாற்றவல்லதாக அமையவேண்டும்.

போராட்டத்திட்டம், ஏதாவது ஒரு போராட்டம் தேவை, தேவை என்ற அரிப்பின் காரணமாக ஏற்படக்கூடாது. அதைச்செய்வோமா! இதைச்செய்வோமா, என்று ஒரு அரசியல் கட்சி மனதை அலையவிடக்கூடாது, அதேபோது போராட்டத்துக்குரிய பிரச்னை எழுந்தால் விடக்கூடாது. இதுதான் நான் சொன்னது லால்குடியில், சொல்வது இப்போதும்.

போராடவே முடியாதவர்களல்ல தி. மு. கழகத்தினர். தழும்பு பெற்றவர்கள் போராட்டங்களிலே!

லால்குடியிலே சொன்னேன் டால்மியாபுரம் என்ற பெயரை மாற்றவேண்டுமென்று தோழர் மு. கருணாநிதி தலைமையில், அங்கே ஜூலை 15-ல் போராட்டம் துவங்கும். கல்லக்குடி என்று அச்சடிக்கப்பட்ட சுவர் ஒட்டிகளை டால்மியாபுரம் என்ற போர்டின் மீது ஒட்டுவார்கள். கிழித்தால் மீண்டும் ஒட்டுவார்கள். எங்கெங்கோ ஒட்டுவார்கள். யார் யாரோ ஒட்டுவார்கள், அப்படியும் பெயர் மாற்றப்படவில்லையானால் தொண்டர்கள் ரயிலில் ஏறி டால்மியாபுரம் தாண்டிச்சென்றதும் ரயிலை நிறுத்தி கல்லக்குடி என்ற பெயர் பொறித்த அட்டைகளுடன் வந்து ஒட்டுவார்கள்.

ஆகவே அங்கு தார்கொண்டு அழிக்க அல்ல. ஒட்டும் போராட்டம் நடைபெறபோகிறது. ஆச்சாரியாரின் புதிய கல்வி முறைப்பற்றி தீர்மானம் நிறைவேற்றினீர்கள்.

ஜூலை மாதம் 13-ம் தேதி ஆச்சாரியார் வீட்டு வாயிலில் மறியல் செய்யப்போகிறோம். 40, 50 தொண்டர்கள் அவர் வீட்டின் முன் படுத்து மறியல் செய்வார்கள். அன்றுதான் சட்டசபை கூடும் நாள்.

ஆச்சாரியார் கல்மனம் உடையவர் என்றால் அந்த தொண்டர்களின் மார்புமீது கால் வைத்து நடந்து செல்லவேண்டும். கொடுமையாளர் என்றால் போலீசை விட்டு தொண்டர்களை தடிகொண்டு தாக்கி ! தூக்கிச் செல்லுமாறு செய்யவேண்டும். கொஞ்சம் பச்சாதாப உணர்ச்சி உடையவர் என்றால், நான் இல்லாவிட்டால் என்ன, சட்டசபை நடக்கட்டும் என்று சட்டசபைக்குப் போகாமல் இருக்க வேண்டும். அந்த போராட்டத்திற்கு தலைமை வகிக்குமாறு தம்பி சம்பத்திடம் சொல்லியிருக்கிறேன்.

எல்லோரும் சென்னைக்கு வாருங்கள். சென்னை மறியலில் கலந்து கொள்வோர் 12-ந் தேதி இரவு என்னையும், சம்பத்தையும் அறிவலகத்திலே சந்தியுங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்தில் இறங்காது இறங்கினால் போராட்டம் வெற்றியடையாமல் உயிருடன் இருக்காது.

போராட்டம், போராட்டம் என்று சொன்னவர்கள் எல்லாம் இப்போது 8-ம் தேதியன்று எம். எல். ஏக்—களைச் சந்தியுங்கள். பின் 13-ம் தேதி மறியலில் கலந்து கொள்ள வேண்டும்.

பின்பு ஜூலை 15-ல் டால்மியாபுரப் போராட்டம் நடை பெற வேண்டும்.

இந்தப் போராட்டங்களுக் கெல்லாம் நீங்கள் ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்

நம்முடைய போராட்டத்தை கம்யூனிஸ்ட் நண்பர்கள் கேலி செய்கிறார்களாம். மாற்றுக் கட்சிகளின் போராட்டங்களை அரசியலில் கண்யமுடையோர் கேலி செயவது கூடாது.

அப்படி கேலி செய்யும் கட்சியினரை நீங்கள் பொருட் படுத்தக்க கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாம் கவனிக்க வேண்டியது இவர்கள் பேச்சையும் அல்ல, போக்கையும் அல்ல. போராட்டத்துக்குறிய பிரச்னைதானா இது, என்று நமக்குள் முடிவு கட்ட வேண்டும். தீட்டும் திட்டம், நாம் கலந்து பேசியதன் விளைவா என்பது தெரிய வேண்டும். அது தான் நமக்கு முக்கியமே தவிர, நமது மனைவி, நமது கண்ணுக்குப் பிடித்தவளாக இருக்க வேண்டுமே—தவிர, எதிர் வீட்டுக்காரன் தீர்ப்பா நமக்கு முக்கியம்.

எனவே, அந்த ஏளனத்தை, நான் பொருட் படுத்த வில்லை.

“திராவிட நாடு திராவிடருக்கே” என்ற பிரச்னை எங்கும் பேசப்படுகிறது. நாடு விழிப்புற்று இருக்கிறது.

நல்ல சமயம் நண்பர்களே ! நல்ல சமயம் !! நமது பணியை மேலும் திறம்படச் செய்வோம், வாரீர் !!! விருதை மாநாடு நமக்கு அந்த வீரத்தையும், ஆர்வத்தையும் அளிக்கிறது. இதனை சிறப்புற நடத்திக் கொடுத்தவர்களுக் கெல்லாம் எனது நன்றி.

வணக்கம்.

[illegible]ன் பிரஸ், சென்னை-1

76082
[illegible]லையடிகள் நூல்நி[illegible]